கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

பெரம்பலூர் மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், மே 18 -

பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி., வழிகாட்டுதல்படி,

இன்று (18.05.2025, ஞாயிற்றுக்கிழமை), மாலை 6.00 மணியளவில் திருச்சி சாலை, தீயணைப்பு நிலையம் எதிரில் உள்ள உள்ள சுபா ரெசிடென்சியில், பெரம்பலூர் மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்

நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில், கழக முதன்மைச் செயலாளரும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சருமான மண்டல பொறுப்பாளர் கே.என்.நேரு கலந்து கொண்டு, கழக வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார். போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கே.என்.அருண்நேரு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், தொகுதி பொறுப்பாளர்கள் தங்க.சித்தார்த்தன், ஏ.கே. அருண் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணி

அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்திய அளவில் சுற்றுலாத்துறையில் சிறந்து விளங்கும்

முதன்மை மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் பெருமிதம்!

சென்னை, மே 18-

சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலாத்துறையின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தற்போது நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து அய்வு மேற்கொள்ளப்பட்டது.

தற்போது சுற்றுலா பயணிகள் சுற்றுலா செல்லும் இடங்களில் நீங்காத அனுபவங்களை அளிக்கும் மலையேறுதல், மலைப் பகுதிகளில் தங்குதல், நீர்சறுக்கு, அலைச்சறுக்கு மேற்கொள்ளுதல் உள்ளிட்ட புதிய அனுபவங்களை மேற்கொள்ள விரும்புகின்றார்கள். இவ்வகை சுற்றுலாக்கள் தற்போது வளர்ச்சியடைந்து வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத் தலங்களில் அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் புதிய சுற்றுலா தலங்களை கண்டறிந்து அவ்விடங்களில் உலகதரத்திலான அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகளை சிறப்பான முறையில் விரைவாக மேற்கொள்ள சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ச.கவிதா, சுற்றுலா ஆணையரக உயர் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

முல்லை வடிவேல்
மே 18 (1999)

கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து உறுப்பினர். செயற்குழு – பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.

தமிழக சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பு வகித்தவர். ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து பதினாறு ஆண்டுகள் அப்பொறுப்பு வகித்தவர்.

வேலூர் கூட்டுறவு வங்கியின் தலைவராகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு, கருப்புக் கொடி, விலைவாசி உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

குற்றாலம் பேரூர்க் கழக முன்னாள் பொருளாளர்

மேலப்பாவூர் பேச்சிமுத்து மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே. 18-

குற்றாலம் பேரூக் கழக முன்னாள் பொருளாளர் மற்றும் ஒன்றிய பிரதிநிதி மேலப்பாவூர் பேச்சிமுத்து அவர்கள் நேற்று முன்தினம் (16.5.2025 - வெள்ளி) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பேச்சிமுத்து அவர்கள் கழகத்தின் மீதும், முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் தளபதி ஆகியோர் மீதும் தீராத பற்றுக்கொண்டவர்.

மறைவு செய்தி அறிந்த தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இர. செங்குட்டுவன்
மே 18 (2021)

இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிளைச் செயலாளராகவும், சித்தாமூர் ஒன்றிய பொறுப்பாளராகவும், மாவட்ட கலை,இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கொளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், சித்தாமூர் ஒன்றியக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டம், ஈழத்தமிழர் ஆதரவு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

56-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மே 18

அடக்கமும் அன்பும் நிறைந்த எனது ஆருயிர் தோழர், பண்பாளர், அன்பாளர், மதிப்பு மிக்கவர் என்றும் எந்நாளும், எல்லோராலும் போற்றப்படுபவர் இந்த மாநிலம் வாழ -மக்கள் வாழ தமது கடைசி மூச்சு வரை வாழ்ந்தவர் - முத்தமிழறிஞர் கலைஞர்.

காட்டு வளமே நாட்டின் வளம்-காட்டைக் காப்போம், நாட்டைக் காப்போம், மாணவர் முன்னேற்றம், கிராமங்கள் தோறும் பள்ளிகள் திறக்க வேண்டும் என முழங்கியவர் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவர். - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தோற்றம் : 15.06.1918

மறைவு : 18.05.1969

முன்னாள் வேளாண்மை துறை அமைச்சர்

ஏ.கோவிந்தசாமி அவர்களின்

என்றும் உங்கள் வழியில் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் கரத்தை வலுப்படுத்துவோம்

முனைவர் க.பொன்முடி M.A.,Phd.,B.L.,MLA
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்

டாக்டர் S.ஜெகத்ரட்சகன் MP
கழக கொள்கை பரப்பு செயலாளர்

அன்னியூர் சிவா MLA
கழக விவசாயத் தொழிலாளர் அணி செயலாளர்

என்றும் தந்தையார் வழியில்

Dr.A.G.இளங்கோவன் M.D.,DM.,Cardiology Dr.சுமதி இளங்கோவன் M.D.,DM.,Cardiology

A.G.பத்மாவதி மருத்துவமனை, பாண்டிச்சேரி